3rd November 1966]

Export Association

* 354 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Export Association is being formed in the State with the active support of the Government for the purpose of boosting export of electrical and other allied materials abroad; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Madras Electrical Export Association has been registered as a non-profit organisation on 1st January 1966, with the active support from the Government of Madras. The Organisation has a strength of 22 members with a subscription of Rs. 5,000 for subscribing members and Rs. 1,000 for associated members.

As the first step towards the study of export possibilities of electrical items, a team of three members was deputed to tour Middle East and East African countries.

திரு. வை. சங்கரன் : இதுபோன்ற 'எலெக்டிரிகல் எக்குவிப் மெண்டு அண்டு அதர் மெடீரியல்ஸ்' உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கு மூலப் பொருளோ அல்லது மற்ற எந்தவிதமான வசதிகளெல்லாம் அளிக்கப்படும்? அதோடு ஏற்றுமதிக்கு அவர்களுக்கு என்னென்ன விதமான சலுகைகளெல்லாம் சர்க்கார் அளிக்க உத்தேசித்துள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்காரில் 'எக்ஸ்போர்ட் இன்ஸெண்டிவ்ஸ்' என்ன இருக்கின்றன என்று அறிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்தால் தெரியும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஏற்றுமதிக்கு வழி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் இப்பொழுது வழிவகை சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற நிலையில் போதுமான கம்பங்கள் இல்லை, போதுமான ஸ்டே ராட் இல்லை. இந்தக் குறை பெரும்பகுதியில் இருந்து வருகிறது. இதன் காரணமாக பல இடங்களில் வேலை செய்ய முடியவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன வழி செய்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவைகளை உள் நாட்டில் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களெல்லாம் இருக்கின்றன.

காமராச சாகர்

* 355 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) காமராச சாகர் திட்ட அணையின் நீளம் என்ன ?

(இ) அத்திட்டத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?